R 5719 (page 202)

# நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே
# Our Standing only in Christ

*“நீர் ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்.” எபிரேயர் 10:5*

தாயாகிய ஏவாள் ஆதாமின் விலாவிலிருந்து எடுக்கப்பட்டதால் அவள் ஆதாமின் சரீரத்தின் ஒரு பாகம் என்பதைத் தவிர அவள் தேவனோடு உறவாடுதலை பெறவில்லை. சபையானது தானே தேவனோடு உறவாடுதலைப் பெறவில்லை என்பதை இது குறிக்கிறது. சபையானது தேவனோடு உறவாடுதலைப் பெறுவதற்கு அவளது கர்த்தராகிய இயேசுவின் பலி தேவையாயிருந்தது. அதாவது அவள் அவரது விலாவிலிருந்து வந்தாள். இரண்டாம் ஆதாம், மரித்தோரிலிருந்து முதற்பேறானவர், நீதிமானாக்குகிறவர், உலகிற்கு ஜீவனை அளிப்பவர். இந்த சுவிசேஷ யுகத்தில் தேவன் சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும்படி தெரிந்து கொண்டு வருகிறார். அவள் அபிவிருத்தி அடைவதில் முன்னேறிக் கொண்டிருக்கிறாள். மணவாட்டியாக, ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாக அவள் இரண்டாம் ஏவாள் என கருதப்படலாம். “வானத்திலிருந்து வந்த கர்த்தராகிய” இரண்டாம் ஆதாமினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்ட அவளது வேலை, வரக்கூடிய யுகத்தில் ஆதாமின் சந்ததியினரை பொறுப்பெடுத்துக் கொள்வதாகும். (1 கொரிந்தியர் 15:45-47)

இந்த முழு சித்திரமும், விழுந்துபோனதின் பொறுப்பு ஆதாம் மேல் இருந்தது என்று நமக்கு காண்பிக்கிறது. தாயாகிய ஏவாள் தான் வஞ்சிக்கப்பட்டாள். அதுதான் முதலாவது மீறுதல் என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார். மேலும் அவர் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் தான் பாவமானது உலகத்தில் நுழைந்தது என்று குறிப்பிடுகிறார். இப்படியாக மரணமானது எல்லா மனிதர்கள் மேலும் வந்தது. ஆதாமின் விழுகையின் பலன் பரம்பரையாக அவனது பிள்ளைகள் மேல் வந்ததால், “எல்லா மனுஷரும் பாவம் செய்தார்கள்” என்று குறிப்பிடுகிறார். “பாவத்தின் சம்பளம் மரணம்” ஆக இருக்கிறபடியினாலும், மரணத்தை கொண்டு வந்தது ஆதாமின் பாவமே ஒழிய, ஏவாளின் பாவம் அல்ல என்பதாலும், அதற்கான மீட்டுக்கிரயம் ஆதாமுக்கு ஒத்ததாக இருக்க வேண்டுமே ஒழிய ஏவாளுக்கு ஒத்ததாக அல்ல.

## பலியின் சரீரம்

ஒரு பலியாக, “எனக்காக ஒரு சரீரத்தை நீர் ஆயத்தம் பண்ணினீர்” என்று நாம் வாசிக்கும் போது, இது சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை பலிக்காக ஆயத்தம் பண்ணினார் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. பலிக்காக ஆயத்தம்

R5720 : page 203

பண்ணப்பட்டது, இயேசுவின் மானிட சரீரமாகும். அதிசயதக்கவிதமாக அது அவருக்கு ஆயத்தம் பண்ணப்பட்டது. அது பரிசுத்தமும் குற்றமற்றதும், மாசில்லாததும், பாவிகளுக்கு விலகினதுமாயிருந்தது. இயேசு மாத்திரமே இப்படி ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரத்தைப் பெற்றிருந்தார்.

நமது கர்த்தராகிய இயேசு, மெல்கிசெதேக்கின் முறைமையின்படி தேவனுடைய ஆசாரியராக நியமனம் செய்யப்பட்டார். ஏனெனில் பலியிடுதல் சம்பந்தமாக இவர் ஆதாமின் உண்மைப் பொருளாக இருந்தார். இவர்தான் தம்மை முதன்முதலாக ஒப்புக் கொடுத்தவர். அதைத் தொடர்ந்து தமது சீஷர்களை ஏற்றுக் கொண்டு தமது பலியின் மூலமாக அவர்களை நீதிமான்களாக்கி, அதன்பின் அவர்களை தமது பலியின் அங்கங்களாக்குகிறார். நிழலில் பாவ நிவாரண நாளின் பாவ நிவாரண பலியை கொடுப்பவர் பிரதான ஆசாரியன் என்பது வெளியரங்கமாக இருக்கிறது. உதவி ஆசாரியர்களில் யாருக்கும் இப்படிப்பட்ட உரிமை கிடையாது. அதேபோல உண்மையான (ஆவிக்குரிய) உதவி ஆசாரியர்களாகிய கிறிஸ்துவின் பின்னடியார்களுக்குப் தங்களை பலியாக ஒப்புக்கொடுக்க தகுதியுள்ளவர்கள் அல்ல. நம்மால் செய்ய முடிந்ததெல்லாம், நமது ஜீவனை மரணபரியந்தம் அர்ப்பணித்து நம்மை நீதிமானாக்குகிற நமது இரட்சகரிடம் நம்மை ஒப்புக் கொடுப்பதுதான். அவர் நம்மை ஏற்றுக் கொண்டு அவரது புண்ணியத்தை நமக்கு சாட்டி, நம்மை அவரது மாம்சீக சரீரத்தின் அங்கங்களாக எண்ணுகிறார். பிறகு தேவன் கிறிஸ்து மூலமாக தமது ஆவியைக் கொண்டு மரணபரியந்தம் சுயபலியின் கிரியையை நிறைவேற்ற “தமது விருப்பத்தையும் செய்கையையும்” நம்மில் உண்டாக்குகிறார். ஆனால் இதுநாள் வரை சபையானது பிரதான ஆசாரியனைப் போல பலியிடப்பட்டு பிதாவிடம் நமது சொந்த நாமத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. பிதாவின் தொடர்பு நமது பரிந்து பேசுகிறவரிடம் மட்டுமே. நாம் குமாரனுடையவர்களாக இருப்பதால் மட்டுமே நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம்.

இவை எல்லாம் பாவநிவாரண நாளின் பாவ நிவாரணபலியில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பிரதான

ஆசாரியன் தனது சொந்த பலியாக, தன்னை தனித்து குறிக்கும்படியாக காளையை முதலாவது பலியிட்டார். அடுத்தபடியாக, பிரதான ஆசாரியன், உதவி ஆசாரியன் அல்ல, கர்த்தரின் ஆட்டை ஒரே ஒரு ஆட்டை, அநேக ஆடுகளை அல்ல, பலியிட்டார். இந்த ஆடானது உதவி ஆசாரியர்களின் பலியாக அல்ல. ஆனால் பிரதான ஆசாரியனின் பலியாகவே செலுத்தப்பட்டது. ஆவிக்குரிய பொருளிலும் அப்படியே இருக்கிறது. இயேசு நம்மை தமது சரீரத்தின் ஒரு அங்கமாக தத்தெடுக்கும்போது, அவர் தமது புண்ணியத்தை நம்மேல் சாட்டுவதால் மட்டுமே நமது அர்ப்பணம் பிதாவினால் ஏற்புடையதாக இருக்கிறது.

இது ஒரு கேள்விக்கு பதிலாக இருக்கிறது. நாம் இங்கே விளக்கியதற்கு மேலாக இந்த காரியத்தை நாம் விளக்க முடியாது. நாம் இதையே வேதாகம பாடங்களிலும், காவற்கோபுரத்திலும் கூற முயற்சித்திருக்கிறோம். கர்த்தருடைய சிந்தை புரிந்து கொள்ளப்பட்டு, நீங்கள் ஆசீர்வாதத்தைப் பெறும்படி நாங்கள் ஜெபத்திற்கு ஊக்கமளிக்கிறோம்.

-----------------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com